நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## ★ பூநகரி இராணுவம் 500மீற்றர் நகர முடிவு!

(கொழும்பு)
ஆனையிறவுப் பாதையைத் திறந்து விடுவதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது. எனினும் வேறு மாற்று பாதைகளை திறப்பதற்கும் அரசாங்கம் இணங்கியுள்ளது.
பூநகரி முகாமை 500 மீற்றருக்கும் பின்நோக்கி அமைப்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 23 இதழ் 337
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 7-1 1995

## இறுதிப் பேச்சுக்கு புலிகள் கொழும்பு அழைக்கப்படுவர்

(கொழும்பு)
இனப்பிரச்னைதீர்வு தொடர்பான இறுதிக்கட்ட பேச்சுக்கள் கொழும்பில் நடைபெறுமென்றும் இப்பேச்சுக்களில் கலந்து கொள்ள விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்படும் என்றும் ஜனதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரி

(4ம் பக்கம் பார்க்க)

## அதிகாரபூர்வ அறிவிப்பு நள்ளிரவு வெளியாகும

(யாழ்ப்பாணம்)
மோதல் தவிர்ப்பு உடன்பாட்டின் அதிகாரபூர்வ அறிவிப்பு இன்று நள்ளரவு வெளியாகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.
மோதல் தவிர்ப்பு குறித்த

(4-ம் பக்கம் பாாக்க)

# அரசு - புலிகள் மோதல் தவிர்ப்பு

# இன்று நள்ளிரவு முதல் அமுல்!

## ஒப்பந்தத்தில் பிரபா - சந்திரிகா கைச்சாத்து !





[கொழும்பு]
அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு இன்று நள்ளிரவு 12மணி முதல் அமுலுக்கு வரும் என ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அறிவித்துள்ளார். நேற்று நாடாளுமன்றம் கட்டிடசதில் நடைபெற்ற விசேஷ பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் இந்த மோதல் தவிர்ப்பு பற்றி அவர் அறிவித்தார். மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனும் ஜனதிபதி சந்திரிகா பண்டாநாயக்கா குமாரதுங்காவும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இன்று நள்ளிரவுமுதல் அமுலுக்கு கொண்டுவரப்படும் மோதல் தவிர்ப்பு பன்னிரண்டு வருடகால இனப்பிரச்னையை தீர்த்து வைப்பதற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் கீழ் தீர்வு?

(கொழும்பு)
இனப்பிரச்னைக்கு பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தின்கீழ் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அரசு ஆலோசித்திருப்பதாக ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.
1959 ம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானது. ஆனல் அப்போது பெரும்பான்மை இனத்தவர் இந்த ஒப்பந்தத்தை எதிர்த்ததால் இதை அப்போது அமுலபடுத்த முடியாமல் போய்விட்டது
அரசியல் தீர்வுக்கு ஆகக் கூடுதலான அளவுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவது தான் அரசாங்கத்தின் நோக்கமாகும்.
இந்த நெருக்கடிக்கு அரசி

(2ம் பக்கம் பார்க்க)

## மோதல்தவிர்ப்புகடைப்பிடிக்க பிரபாதளபதிகளுக்குபணிப்பு

(யாழ்ப்பாணம்)
அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இன்று நள்ளிரவிலிருந்து அமுலுக்குவரும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை கடைப்பிடிக்குமாறு விடுதலைப்புலிகளின சகல பிராந்திய தலைவர்களுக்கும் தலைவர் திரு. வே. பிரபாகரன் விளக்கமாக அறிவித்துள்ளார்
இந்த மோதல் தவிர்ப்பு உடன்பாடு குறித்த ஒழுங்கு விதிகள் தொடர்பாக தலைவர் பிரபாகரன் விடுதலைப் புலிகளின் சகல பிராந்தியத் தளபதிகளுக்கும் அறிவித்துமுள்ளார்.
விடுதலைப் புலிகளின் சகல மாவட்ட தளபதிகளும்

(4-ம் பக்கம் பார்க்க)

## மேற்குலக நாடுகளின் கண்காணிப்பு முக்கியமானது

(யாழ்ப்பாணம்)
அன்ரன் பாலசிங்கம்

மோதல் தவிர்ப்பைக் கண்காணிக்க மேற்குலக நாடுகளின் பிரதிநிதிகள் வருவது மிக முக்கியமானதொரு விடயமாகும். இது ஓரளவில் இலங்கை இனப்பிரச்னை சர்வதேசமயப்படுத்தப்படுகிறது என்பதையே காட்டுகிறது,
இவ்வாறு மோதல் தவிர்ப்பு உடன்பாடு தொடர்பாக நேற்று நடடபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். இப்பத்திரிகையாளர் மாநாட்டில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனும்

(4-ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்பு குழுவின் பணி உடன் ஆரம்பிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
மோதல் தவிர்ப்பை கண்காணிக்கும் கண்காணிப்புக் குழு தனது பணியை எவ்வளவு விரைவாக தொடங்க முடியுமமோ அவ்வளவு விரைவாக ஆரம்பிக்கும்.
இக்குழுவில் அங்கம் வகிப்பவர்களில் விடுதலைப் புலிகள் தமது பிரதிநிதிகளின் பெயர் விபரங்களை அரசிடமும் அரசு தனது பிரதி நிதிகளின் பெயர் விபரங்களை புலிகளிடமும் கொடுத்து பரஸ்பர இணக்கப்பாட்டுடன் இந்த நியமனங்கள் நடக்கும்.
இதே வேளை இந்தக்குழுவினருக்கு மோதல் தவிர்ப்பு உடன்பாடு அமுலாக்கலை கண்காணிப்பதற்கு முழு அதிகா

(4-ம பக்கம் பார்க்க)

## ★ போர் இடைநிறுத்த பிரகடன விபரம்

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு போர் நடவடிக்கைகளை இடைநிறுத்தம் செய்வதென அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் மத்தியில் ஏற்பட்ட உடன்பாட்டில் கடைப்பிடிக்க வேணடிய நடைமுறைகள் வருமாறு:

★ இந்தக் காலகட்டத்தில் இருதரபபினரும் எவ்வித தாக்குதல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடாது. அப்படித் தாக்குதல் நடவடிக்கை ஏதாவது மேற்கொள்ளப்படுமாயின் அது இந்த ஒப்பந்த மீறல் நடவடிக்கையாகக் கருதப்படும்.

★ பாதுகாப்ப படையினரும் விடுதலைப்புலிகளும் தமக்கு மத்தியில் 600 மீற்றர் இடைவெளியில் தற்போதைய நிலைகளில் தரித்திருப்பர் எனினும் இரு தரப்பினரும் தமது காவலரண் நிலைகளிகலிருந்து 100 மீற்றர் தூரம்வரை நடமாட உரிமையுண்டு. அதாவது 400 மீற்றர் இடைவெளியை வைத்துக்கொண்டு இரு தரப்பினரும் இந்தக் குறிப்பிட்ட தூரம்வரை நடமாடலாம். இந்தத் தடைசெய்யப்படட பிரதேசத்தை அத்து மீறுதல் போர் நடவடிக்கையாககருதப்படும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

அனுபவமுள்ள மெசின் மைண்டர் தேவை பழக ஆர்வம் உள்ள இளைஞரும் விண்ணப்பிக்கலாம். தேவி அச்சகம், 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், (சி-1364)

### 25–03–95 வரை செவ்வாய் வக்கிரம்

யுத்தச் செவ்வாய் பலவீனமாவதால் சண்டைநிறுத்தம், அமைதிப் பேச்சுக்கள், பரிணும வளர்ச்சி அடையும். புத்தாண்டுப் பலன்கள் ரூபா 10/-. பாடசாலை உபகரணங்களுக்கு: துர்க்கா ஸ்ரேசனர்ஸ், சுன்னுகம். (சி-1365)

### பண்டா–செல்வா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யல் தீர்வுகாண பொதுசன ஐக்கிய முன்னணி அரசுக்கு மக்கள் ஆணை வழங்கியிருக்கிருர்கள் என்று ஜனுதிபதி தெரிவித்தார். -இ ரி வி சி

### அழுக்ககற்ற மில்க்வைற்

வன்நீரிலும், துணிஇழைகளிடையே உள்ள நுண் துளைக்கு மிடையே ஊடுருவி, அழுக்கையும் பிசுக்கையும் அகற்றும் அதி அற்புத நுரைவளம் கொண்டவை மில்க்வைற் நீல சோப்/சலவைத்தூள் சீருடைகள், அலுவலக அணிகள் என்றும் பளிச்சிடும் வெண்மையுடன் விளங்கிட மில்க்வைற் சோப் / சலவைத் தூள். 25 மேலுறைகளுக்கு ஒரு அப்பியாசக் கொப்பி. 100க்கு ஒரு கைலேஞ்சி, 500க்கு ஒரு துவாய் அன்பளிப்பு. —மில்க்வைற். (எ 4644)

## இராசி பலன்

7–1–1995

சனிக்கிழமை

(தமிழுக்கு மார்கழி 23)

ஷஷ்டி நண்பகல் 11-59 வரை; பூரட்டாதி முற்பகல் 9-31 வரை, மரணயோகம். இராகுகாலம் காலை 9-32 முதல் 11-02 வரை, சுப நேரம் காலை 3-32 முதல் 5-02 வரை.

மேடம்: புதிய சிந்தனை' கலைஞானம், தொழில் சிரமம்'

இடபம்; முதியவர் ஆசி. குடும்பநன்மை, பணப்புளக்கம்.

மிதுனம்; கடமையுணர்வு, நண்பர் சகவாசம், விருந்துண்ணல்.

கடகம்: அமைதியற்றசூழல் உடலுபாதை. அதிகயோசனை.

சிங்கம்: விடா முயற்சி. தாயார் துன்பம், வழித்தொல்லை,

கன்னி: தொழில் லாபம், அதிகாரிகள் உதவி, பயண நன்மை.

(3ம் பக்கம் பார்க்க)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-01-07 சனி இரவு

08-01 சொல்லுங்கள் பார்க்கலாம்
08-10 தாயகப் பாடல்கள்
08-20 உழைப்போம் உயர்வோம் ''உவர்த்தன்மையை நீக்குவோம்', குறுநாடகம்
08-30 செய்திகள்
08-40 தரிசனம் நடனக் கலைஞர் திருமதி சாந்தினி சிவநேசன் அவர்களுடனுன செவ்வி
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

1995–01–08

ஞாயிறு காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

### தமிழீழ வானெலி நிகழ்ச்சி நிரல்

1995-01-07 சனி மாலை ஒலிபரப்பு

05-00 ஒலிபரப்பு ஆரம்பம்
05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் விஞடிவினு போட்டி போட்டியிடும் பாடசாலைகள்: சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி. நாவற்குழி மகாவித்தியாலயம்
06-00 சிந்தனைக்குச் சிலவினுடிகள்
06-02 பாமாலை
06-15 என் தெரிவுகள்
06-30 மாலை ஒலிபரப்பு யாவும் நிறைவு பெறும்

## பலதும் பத்தும்

### மருத்துவ சேவை

இன்று... இங்கு.. அரச மருத்துவ மனைகளில்... வைத்தியர் பற்ருக்குறை, மருந்துகள் தட்டுப்பாடு, வைத்திய பரிசோதனைக் கருவிகள் இல்லாமை என்றெல்லாம் குறைப்படுகிருேம்.

ஆனுல்... இருபதாம் நூற்ருண்டுத் தொடக்கம் வரை, யாழ்ப்பக்ணத்தில் அரச மருத்துவ மனைகள் எதுவுமேஇருக்கவில்லையாம். 1820ல்... பண்டத்தரிப்பில் அமெரிக்க மிஷன் வைத்தியசாலையும், 1828ல் நாயன் மார்கட்டு வைத்தியசாலையும், 1848ல் மானிப்பாய் கிறீன் நினைவு மருத்து மனையும் ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கு முன்..? ஆயுள் வேத சித்த வைத்தியர்களும், இயற்கையோடு இயைந்த வாழ்வு முறைகளும், உள்ளூர் உணவு வகைகளும் நோய்களுக்கு எதிரிகள்!

—மயூரன்

## தேவை

கணக்கியல், நிர்வாகம் ஆகிய துறைகளில் பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை: க. பொ. த. உயர் தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியும், க. பொ. த. சாதாரண தரத்தில் ஆங்கிலம், தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது: 25 வயதிற்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி: 14-1-95.

விளம்பர இல; எ 4655

மே/பா ஈழநாடு லிமிட்.,
த. பெ. எண்: 49,
யாழ்ப்பாணம். (எ 4655)


துர்க்கா துரந்தரி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஜே. பி. அவர்களின்

70-வது பிறந்தநாளில்

துர்க்காதேவியின் அருள் கிடைக்கப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேம்

அந்தணர்கள் – பணியாளர்கள்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம்

(ஏ-4649[

தமிழ் கூறும் நல்லுலகெங்கணும் சைவமும், தமிழும் தழைத்தோங்க

70-வது பிறந்த நாளில்

உங்கள் பணி தொடரட்டும்

சிவமயச் செல்வி

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களை வாழ்த்துகிறேம்

சிங்கம் பார்மஸி

[ஆஸ்பத்திரி முன்பாக]

யாழ்ப்பாணம்

(ஏ-4633[

நல்லைநகர் நாவலருக்குப்பின், சைவத்துக்கும் தமிழுக்கும் அரைநூற்ருண்டுகளுக்கு மேலாகத் அருந்தொண்டாற்றி

70 வது ஆண்டில்

காலடி எடுத்துவைக்கும் துர்க்கா துரந்தரி, பண்டிதை

தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்கள்

துர்க்கை அம்மன் அருளால் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றேம்

அண்ணு தொழிலகம் இணுவில்

(ஏ-4654)

தமிழ்கூறும் நல்லுலகின் சைவஒளி சிவத்தமிழ்ச் செல்வி சைவப்புலவர்

தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களுக்கு

70வது பிறந்த நாளில்

நந்தாவில் அருள்மிகு ''ஸ்ரீ முன்னனீஸ்வரர்'' அருள்பாலிக்கட்டும்

ச. சிறீஸ்கந்தராஜாக்குருக்கள்

நந்தாவில் ஸ்ரீமுன்னனீஸ்வரர் ஆலய பிரதமகுருவும் பரிபாலகரும்

(எ- 4652)

சிவத் தமிழ்ச் செல்வி பண்டிதை

தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின்

70வது பிறந்த நாளில்

எமது நன்றி கலந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேம்.

அன்புடன்

பணியாளர்கள்

திருமகள் அழுத்தகம்

சுன்னுகம் (எ-4650)

அருள் மொழிச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

70 வது பிறந்தநாளில்

துர்க்கை அம்மன் அருள் கிடைக்கப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேம்

தெல்லிப்பழை பல நோ. கூ. சங்கம்

[மானிப்பாய் மருதடி விநயகர் ஆலய அருகாமை]

(ஏ-4651)

### மணிவாக்கு

ஏற்றம் என்பது இறைவனின் பரிசு, இறக்கம் என்பது இறைனின் சோதனே, பிறப்பால் தொடரும் உறவுகளெல்லாம் பிணைப்பால் தொடரும் உறவுகளே உன்னதமானவை.

- பாரதியார்

## நமது நோக்கு

### ஏனிந்த அவமதிப்பு?

புத்தாண்டு பிறந்த நள்ளிரவு வேளை - 12-30 மணியளவில் - சோழப் பேரரசன் இராஜராஜ சோழன் தலைநகராக்கி ஆண்ட தஞ்சையில் - விடுதி ஒன்றில் கதவைத் தட்டி, ''விசா திரும்பப் பெறப்பட்டுள்ளது; உடனடியாக வெளியேறுங்கள்!'' எனக் கூறி, கைது செய்து, நாட்டைவிட்டு வெளியேற்றி யுள்ளார்கள் தமிழறிஞர்களை!

கிரிமினல் குற்றவாளிகளைப் போல நடத்திய இந்த அவமதிப்பு, உலகத் தமிழர்கள் அனைவருக்குமே ஏற்படுத்திய தலைக் குனிவு; அவமானம்!

முறைப்படியான அழைப்புக் கிடைத்து, முறையாக விசா பெற்றுத்தான் அறிஞர்கள் அங்கு சென்றிருக்கிறார்கள்.

இந்த அவமதிப்பு மிக அநீதியான செயல் என்பதை உணர்ந்து, இறுதி நாள் நடந்த பல பிரதான அமர்வுகளில் தமிழறிஞர்கள் பலர் பங்கு பற்ருது, புறக்கணித்து, தமது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

இந்த அவமதிப்புக்கு யார் காரணம்? ஏன் நடந்தது?

உலகில் வாழும் தமிழர்கள் அடிமைகள்தானே; அவர்களை எப்படியும நடத்தலாம் என்ற ஆணவப் போக்கின் ஒரு அம்சமா எனத் தமிழ் மக்கள் கேட்கிறார்கள்!

அண்ணு தலைமை அமைச்சராக இருந்து தமிழாராய்ச்சி மாநாட்டைச் சென்னையில் நடத்திய வேளையிலும், தமிழுணர்ச்சியை அடக்கிட எடுத்த முயற்சிகளை நாம் மறப்பதற்கில்லை.

இன்று - தமிழகத் தமிழர்களையும், ஈழத் தமிழர்களையும் பிரித்திடப் பல்வேறு சூழ்ச்சிகள் நடைபெறுகின்றனவா என்ற சந்தேகக் கேள்வியும் மக்கள் எழுப்புகிறார்கள்.

வந்தாரை வாழ வைக்கும் தமிழர் பண்புகளும், மரபுகளும் இன்று மறுக்கப்பட்டு, நாடு கடத்தப்படும் அவல நிலை தோன்றியிருப்பது தமிழுணர்ச்சி அருகி வருவதையா காட்டுகிறது.

புறக்கணிப்புச் செய்து அவமதிப்புச் செய்ததை கண்டித்தும், மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் திராவிடத் தலைவர் வை. கோபாலசாமி கோரிக்கை விடுத்திருப்பது நியாயமானதே!

★ இன்று 70 வது பிறந்ததினம்

# தங்கம்மா அப்பாகுட்டி தமிழரின் தேசிய சொத்தாகிவிட்டார்



செந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கடந்த அரைநூற்ருண்டுகளாக ஈழத்தில் மட்டுமல்லாது கடல் கடந்து தமிழர் வாழும் இடமெல்லாம் சென்று, தமது செந்தண்மை மிக்க சொற்பெருக்கால் சைவத்தையும், தமிழையும் வளர்த்து வருகின்ருர்கள். இவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பதைப் பெரும் பாய்க்கியமாகக் கருதும் தமிழன்பர்கள் ஏராளம்.

தத்துவச் சிதறல்கள், மென்மையான சொற் கோர்வைகள், இலக்கண ஆசிரியரின் சுத்தமான உச்சரிப்பு, கணீரென்ற தொனி, இசையாசிரியரை ஒத்த பண்ணிசைப் பாடல்கள், வெள்ளிமலைச் சொல்லருவி, சொல்லிலும், செயலிலும், உருவிலும் மின்னும் எளிமை.

ஈழத்துத் தமிழ் மக்கள் அவரை இன்றுவரை தமது குடும்பத்தில் ஒருவராக, தேசியச் சொத்தாகவே கருதி வருகின்றனர். இதுவும் இறைவனின் திருவிளையாடல் தான். இல்லற வாழ்வை நல்காது நாட்டுக்காக உழைத்து வரும் அவருக்கு எத்தனை பெரிய குடும்பம். 1925-01-07ம் திகதி தெல்லிப்பளையில் உள்ள குளமன்கால் என்னும் குறிச்சியில் அப்பாக்குட்டி, தையற்பிள்ளை என்னும் பெற்றேருக்கு இரண்டாம் மகவாகப் பிறந்தார். தந்தையார் ஆசிரியராஞலும் மலைநாட்டில் பணிபுரிந்ததால், வறுமையே வீட்டில் அரசோச்சியது. ஊரிலேயே இளமைப் பருவக் கல்வி கற்ருலும், தமது உயர்நிலைக் கலவியைப் புகழ் வாழ்ந்த சுன்ஞகம் இராமநாதன் கல்லூரியில் பெற்ருர்

சைவப் பணிக்கு வித்திட்ட இடம் இதுவாகும். இங்கு கல்வி கற்கும் மாணவியர், கட்டாயமாகக் காலை ஆறு மணிக்கும், மாலை ஆறு மணிக்கும் கல்லூரியில் உள்ள கோயிலில் சென்று ஒரு மணித்தியாலம் வழிபாடு செய்யவேண்டும். மாலைகளில் பெரும்பாலும் புராணம் படித்துப் பயனும் கூறுவார்கள். அப்போது இவர்களுக்குப் பயன் கூறி வந்தவர் சோமசுந்தர வாத்தியார் என்பவராகும். நாளடைவில் செல்வி அவர்கள் புராணம் படிப்பதில் சிறப்பு மிக்கவரானுர். அதுவே இன்று இவரைச் சிவத்தமிழ்ச் செல்வி ஆக்கிற்று என நினைவு கூருகின்ருர். அத்துடன் 1941ம் ஆண்டு இராமநாதன் கல்லூரியில் தாம் அப்பூதியடிகள் பற்றிப் பேசிய பேச்சே தமது கன்னிப் பேச்சு என்கிருர்.

இவரது சமயச் சொற்பொழிவுகள், தமிழகத்தில் உள்ள எல்லா ஆதீனங்களிலும் நடந்தேறியுள்ளதுடன், அம்மடங்களால் சிறப்புப் பட்டங்களும் சூட்டப்பட்டுக் கௌரவிக்கப்பட்டுள்ளார். 1965 டிசம்பரில் சிதம்பரத்தில் நடைபெற்ற சைவ சித்தாந்த வைர விழாவில் இவர் ஆற்றிய உரையைக் கேட்ட அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தினர் அழைப்புக்கிணங்க, அங்கு சென்று 'சிலம்பு' பற்றி உரையாற்றினுர். 1971 ஏப்ரலில் மலேசியா சென்று பல இடங்களிலும் சொற்பொழிவாற்றிப் பெரும் மதிப்புப் பெற்ருர். இவரின் மலேசிய உரைகள் 'மலேசியச் சொற்பொழிவுகள்' என்ற நூலாகவும் வெளிவந்துள்ளது.

1972ல் மீண்டும் சிலாங்கூர் சென்று பெரும் புகழ் பெற்றுத் திரும்பினுர். 1973ல் திருவிடைமருதூரில் நடைபெற்ற திருமுறை விழாவிற்குச் சென்று கலந்துகொண்டதுடன், திருமுறைக் கருத்தரங்கின் மாதர் பகுதிக்குத் தலைமை தாங்கும்படி ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகளால் கேட்டுக்கொள்ளப்பட்டார். அதே ஆண்டு சிவகங்கை மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். திருவாவடுதுறை திருமறைக் கருத்தரங்கில் ஆளுநர் ஷா தலைமையில் பங்கு பற்றினுர். சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம் நடத்திய கருத்தரங்கிலும் பங்குபற்றிப் பெருமை சேர்த்தார்.

ஆசிரியத் தொழில் புரிந்த செல்வியார், தமது ஓய்வுக் கால வயதுக்கு முன்னமே தொழிலிலிருந்துஓய்வு பெற்றமைக்குக் கூறும் காரணம், பல் விழுவதற்கு முன்னமே இறை புகழ் பேசவேண்டும். 'பல் விழுந்தால் சொல் போச்சு'. ஆகவேதான் ஓய்வுக் காலத்திற்கு முன்னரே தொழிலைக் கைவிட்டேன்.

செல்வி தங்கம்மா அவர்களுக்கு மேடைகள் தோறும் பொன்னாடை போர்த்துகின்ருர்கள். சிலசமயம் அவை இரட்டிப்பாவதுமுண்டு. இவர் பொன்னாடைகளை மறுப்பதில்லை. அப்பொன்னாடைகள் கிராமத்திலுள்ள ஏழைத் திருமணங்களுக்கு 'கூறைப் புடைவைகள்' ஆகின்றன. சிங்கப்பூர், மலேசியா போய்வரும் காலங்களில் அன்பு மிகுதியால் கொடுக்கப்பட்ட ஏராளமான நைலக்ஸ் புடைவைகளை இவர்கள் கொண்டு வந்து, நைலக்ஸ் புடவை ஒன்றையேனும் வாங்க வழியற்றவர்களுக்குக் கொடுத்துவிடுவார். இவர்கள் அணிவது கைத்தறிப் புடவை மட்டுமே.

—தொகுப்பு: க. கனகராசா.

### இன்றைய பலன்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

துலாம்: எதிர்பாராத உதவி சகோதர நிறைவு, கலகலப்பு.

விருச்சிகம்: முரண்பாடு, காரிய தாமதம், வைத்திய செலவு.

தனுசு: புத்திரர் கவலை, வீண் சச்சரவு, மனைமாற்றம்.

மகரம்: நற்செய்தி, கல்வியால் சிறப்பு, பண வரவு.

கும்பம்: முயற்சி தடை, வயிற்றுவலி, குடும்ப மனஸ்தாபம்.

மீனம்: இனசன வருகை, பெரியோர் அறிவுரை, தயாள சிந்தை.

ஜோஸ்யர்

### ஏழைக்காய் வாழும் தாய்க்கு...

ஏழ்மையில் தாய் அன்புக்கு
ஏங்கிடும் சிருர்க்கு உண்மை
வாழ்வினைக் காட்டும் ஒளியாய்
வாஞ்சையோ டணைக்கும் தாயாய்
நாளெல்லாம் சைவம் நீதி
நயந்திடும் ஒழுக்கம் பேணும்
தூய தங்கம்மை துர்க்கா
துரந்தரி நீ நீடு வாழி!

ஆலயம் செய்து தர்மம்
அறப்பணி சைவம் காத்து
காலத்தின் சுமை யதாலே
கலங்குவர்க் குதவி செய்து
ஞாலத்தின் விடிவுக் காக
நாளெல்லாம் இறையை நோக்கும்
ஏழைக்காய் வாழும் தெய்வத்
தாய்க்கு எம் இதய வாழ்த்து!

— நெடுந்தீவு லக்ஸ்மன்

★

### மெய்யார வாழ்த்துவோம்

துக்காபுரம் மேவுபுகழ் தூயவன்னை சுந்தரியை
எக்களியஞ் செயினும் ஏற்றமுறச் செய்பவளை
தக்கறிஞர் பாராட்டும் தகைமையளாம் மேதையளை
மிக்கவுயர் பண்பினை மெய்யார வாழ்த்துவனே.

பொங்குபுகழ் சுமந்தவளைப் பூதலத்தோர்
போற்றுகின்ற
தங்கமிகு பிரசங்கம் மழையென்னச் சொரிபவளை
கங்குல் பகல் துர்க்கையளைக் கண்ணுரக்
காண்பவளைத்
தங்கம்மா பெயரினள்தம் சந்ததமும் போற்றுவனே.

— நயினை இ. கிருபானந்தா.

★

### தரணிக்கோர் ஔவைப் பாட்டி

தங்கம்மா அப்பாக் குட்டி
தரணிக்கோர் ஔவைப் பாட்டி
எங்கும்நல் மொழியை ஊட்டி
இரவிபோல் ஒளியைக் காட்டி
கங்கைவார் சடையைக் கூட்டிக்
காசினிக் கனியைப் பூட்டித்
துங்கமார் புகழே நாட்டித்
துலங்கியே வாழி!! வாழி!!!

— கவிஞர் வே. ஐயாத்துரை.


## முழுமதியன்ன பொலிவு

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மாஅப்பாக்குட்டி அம்மையார் அவர்களின்அறப்பணிகள்
சமுதாய ஆளுமை, சிந்தனை, செயல், சொல் ஒருமைப்பாடு ஆகியவை சர்வதேச மட்டத்தில்
உலக முன்னணி பல்கலைக்கழகங்களில் ஆய்வுக்குக் கொள்ளத்தக்க அளவுக்குத்
தனித்துவம் வாய்ந்தவை. இவை நாம் அவர் மீது கொண்ட மதிப்பிற்
பிறந்த உபசார வார்த்தைகள் அல்ல என்பதைக்காலம் காட்டும்.
அருட்சக்தி துர்க்கையவள் அம்மையாருக்கு நிறைவாழ்வு கொடுப்பாளாக

கலாநிதி க. கனகராசா ஜே. பி.

(ஏ-4647)

## நாங்கள் நலமே வாழ 'அம்மா' நீங்கள் பல்லாண்டு வாழவேண்டுகிறேம்!

## துர்க்கா பொத்தகச்சோலை

சுன்ஞகம்

(ஏ-4648)

பிரபாவும் சந்திரிகாவும்

# 1990 முதல் போர்நிறுத்தம் செய்ய உடன்பாடு

(கொழும்பு)

யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே.பிரபாகரனும் 1990 ஆம் ஆண்டுகாலப் பகுதியிலேயே ஒரு முடிக்கு வந்தனர் என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதிக்கு நெருங்கி வட்டாரங்களை ஆதாரம் காட்டி இத்தகவல் தெரிவிக்கப்பட்டது. இ-ரி

அன்ருடப்பிரச்னை பற்றி

# அடுத்த கட்டபேச்சில் அரசின் தீர்வை எதிர்பார்க்கிறேம்

– அன்ரன் பாலசிங்கம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளால் வற்புறுத்தப்பட்ட அன்ருடப் பிரச்சனைகளுக்கு அரசு என்ன தீர்வை முன்வைக்கப் போகிறது என்பதையும் இதற்கு அரசு பிரதிநிதிகள் தீர்க்கமான முடிவோடு அடுத்த கட்டப் பேச்சுக்கு வருவார்சள் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறேம்.

இவ்வாறு தெரிவித்த திரு. அன்ரன் பாலசிங்கம் மேலும் கூறுகையில்; இனப்பிரச்னைகளின் அடிப்படைகளை ஆராய்வதற்குமுன் அன்ருடப் பிரச் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படவேண்டுமென வலியுறுத்தி வருவது யாவரும் அறிந்ததே.

இதேவேளை அரசு முன்வைக்கும் தீர்வுத் திட்டங்களை நாம் பரிசீலிக்கத் தயாராய் இருக்கிறேம். எனினும் முழுமையானதொரு சகஜநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். போர் நிறுத்தம் முழுமையானதாக, நிலையானதாக அமைய வேண்டும். அன்ருட பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேம். இவற்றுக்கு அரசு தீர்வுகளை முன்வைக்கும் பட்சத்தில் அடிப்படைப் பிரச்னைகள் பற்றி பேசத் தயாராயுள்ளோம்,

-வி-இ-சி-ரி

# பண்டாவின் 96வது

## பிறந்த நாளில் மோதல் தவிர்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் தந்தையாரும் முன்நாள் பிரதமருமான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் 96-வது பிறந்த தினம் நாளை 8ம் திகதியாகும்.

இதனை நினைவு கூரும் முகமாகவே விடுதலைப்புலிகளுடனு மோதல் தவிர்ப்பு நாளை 8-ம் திகதி முதல் அமுல்படுத்துவதற்கான முடிவு ஜனாதிபதியினுல் எடுக்கப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. (இ)

படைமுகாம் தவிர்ந்த

# கடற்பகுதிகளில் மீன்பிடிக்கலாம்

[யாழ்ப்பாணம்]

இராணுவ முகாம்கள், கடற்படை முகாம்களை அண்மித்த பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய கடற்பகுதிகளில் மீனவர் மீன் பிடிக்கலாம்.

இவ்வாறு தெரிவித்த திரு. அன்ரன் பாலசிங்கம் மேலும் கூறுகையில்: கடலில் படைமுகாம்கள் உள்ள பகுதிகளில் படைமுகாமிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் நின்றே மீன்பிடிக்க வேண்டும். இதனை மீனவர்கள் நன்குகவனத்திலெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். -சிரி-வி-இ

போர் இடை நிறுத்தம்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

★ அந்நிய ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டின் இறைமையையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் தமது சட்டபூர்வமான பணிகளைக் கடற்படையும், ஆகாயப் படையும் தொடர்ந்து கடைப்பிடிக்கும். இந்தப் பணியின்போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக எவ்வித தாக்குதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படமாட்டாது. குறிப்பிட்ட பிரதேசங்களில் சட்டபூர்வமான மீன் பிடித்தொழிலுக்கு இடையூறு விளைவிக்கப்படமாட்டாது.

★ நாசகாரச் செயல்கள், குண்டு வெடிப்புகள், கடத்தல்கள், கொலைகள். பயமுறுத்தல்கள் போன்ற நடமடிக்கைகள் எத்தவொரு அரசியற் கட்சிகள், குழுக்கள் தனி நபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுமாயின் அது ஒரு தாக்குதல் நடவடிக்கையாகக் கருதப்படும்.

★ (அ) இந்த ஒப்பந்தம் மீறப்படாமல் கண்காணிப்புச் செய்வதற்கும், ஒப்பந்த விதிகள் மீறப்படுவதை விசாரணை செய்வதற்கும், கண்காணிப்புக் குழுக்களை நியமிக்க யோசனை தெரிவிக்கப்பட்டது, இந்தக் குழுக்கள் யாழ்ப்பாணம், மன்னுர், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் தேவைப்படும் இடங்களுல் நியமிக்கப்படலாம்.

(ஆ) இரு தரப்பினரில் யாராவது முறையீடு செய்தால் அதனை விசாரித்து, அந்தந்தப் பிணக்குகளைத் தீர்க்கும் பொறுப்பு இந்தக் கண்கணிப்புக் குழுக்களுக்கு வழங்கப்படும்.

(இ) கனடா, நோர்வே, நெதர்லாந்து, சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஆகியனவற்றிலிருந்து இந்தக் குழுக்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதுடன், இரு தரப்பினரது இணக்கத்துடன் உள்ளூரில் ஒய்வுபெற்ற நீதிபதிகள், அரசாங்க அதிகாரிகள், மதத் தலைவர்கள் மற்றும் முக்கிய பிரஜைகளும் இக்குழுக்களில் அங்கத்துவம் வகிக்கலாம்.

(ஈ) இந்தக் குழு ஒவ்வொன்றும் ஐந்து பேர்களை அங்கத்தவர்களாக கொண்டிருக்கும்.

அரசாங்கத்திலிருந்து இருவர்.

விடுதலைப்புலிகளிலிருந்து இருவர்.

வெளிநாட்டிலிருந்து ஒருவர். (இவர் குழுவின் தலைவராக இருப்பார்)

(உ) இந்தக் குழுவின் பிரதிநிதிகள் தமது பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு அவர்கள் சுதந்திரமாக நடமாடுவதை இரு தரப்பினரும் அனுமதிக்கவேண்டும்.

(ஊ) இந்தக் குழுவின் பிரதிநிதிகள் தமது பணிகளை நடுநிலையாகவும், விரைவாகவும் மேற்கொள்ள இரு தரப்பினரும் வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும்.

உள்ளூரில் எழும் பிரச்னைகளை உடன் தீர்த்துவைக்கும் பொருட்டு பாதுகாப்புப் படையினருக்கும்புலிகளின்மாவட்ட தளபதிகளுக்கும் மத்தியில் தகவல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

★ மோதல் தவிர்ப்பை நிறுத்தப் போவதாக இரு தரப்பினரில் ஒருவர் அறிவிக்கும் வரை போர் இடை நிறுத்தம் தொடரும் இந்த அறிவிப்பு 72 மணி நேரத்திற்கு முன்னராக தரப்படவேண்டும்.

இந்த பிரகடன ஒப்பந்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் திரு. வே. பிரபாகரனும், ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் நேற்று முன்தினம் 5ம் திகதி கைசாத்திட்டு வெளியிட்டனர், வி இசி-ரி

## பரிசளிப்பு விழா

(வட்டுக்கோட்டை)

தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. கா. சிவரர்ஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு, ப, விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிருர். -139-ரி

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

இறுதிப்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே அவா இவ்வாறு தெரிவித்தார். ரி-வி-இ

பூநகரி
1ம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கும் அரசாங்கம் இணங்கியிருக்கிறது.

ஆனல் பூநகரிமுகாமை அகற்றுவது பற்றி குறித்து விடுதலைப்புலிகளுடன் எந்தவித ஒப்பந்தத்தையும் அரசு செய்துகொள்ளவில்லையென்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று தெரிவித்தார். இரி

அதிகார
(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரபூர்வ அறிவிப்பை இலங்கை அரசு இன்று இரவு எழுத்துமூலம் வெளியிடும். இதன் பிரதிஒன்று விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பிவைக்கப்படும்.

விடுதலைப் புலிகளும் எழுத்துமூலம் மோதல் தவிர்ப்பை அறிவிப்பார்கள் இதிலிருந்து மோதல் தவிர்ப்பு ஆரம்பமாகுமென தெரிவிக்கப்படுகிறது. சி-ரி

அரசு புலிகள்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது ஒரு முக்கிய நடவடிக்கையாக இருக்கும். பொ.ஐ.மு. அரச பெரும்பான்மைச் சமூகத்தினரின் உரிமைகளை பாதுகாக்கும் அதேசமயம் சகோதரத்துவம், சமூகங்களுக்கிடையிலான நல்லுறவு ஆகியவற்றை ஊக்குவித்து பாதுகாப்பு அளிக்கும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்,

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

இனப்பிரச்னைக்கு சமாதானமாக ஒருதீர்வை காணும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றிருக்கிறது. தற்போதைய போர் தவிர்ப்பு உடன்பாட்டிற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் மூலம் இணக்கம் கண்டுள்ளோம்.

ஆயுதப் போருக்கும் இனப் பிரச்னைக்கும் வழிகோலியுள்ள அடிப்படை விடயங்களை ஆராய்வதற்கான பேச்சுவார்த்தைகளுக்குரிய ஒரு பீடிகையாகவே இப்பகைமை நிறுத்தத்தை அரசாங்கம் கருதுகிறது.

அதிகாரபரவலாக்கல் சம்பந்தமான அரசாங்கத்தின் யோசனைகளின் தொகுதியொன்று விடுதலைப் புலிகளுக்கு விரைவில் அறிவிக்கப்படும். அது பேச்சுவார்த்தைகள் மூலம் ஓர் அரசியல் தீர்வு காண்பதற்குரிய அடிப்படையாக அமையவிருக்கிறது. எதை இழந்தும் சமாதானம் என்பதிலும் பார்க்க கௌரவத்துடன் சமாதானம் என்பதையே அரசாங்கம் விரும்புகிறது. ரி.வி-இ

# ஒப்பந்தம் மீறப்பட்டாலு சமாதான முயற்சி தொடரும்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் மீறப்பட்டாலும் கூட சமாதான முயற்சிகள் நிறுத்தப்படமாட்டாது என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

3வது கட்டப் பேச்சுவார்த்தைக்கு அரசாங்கத்தூதுக்குழு எதிர்வரும் 14ம் திகதி யாழ்ப்பாணம் செல்லும் சமயத்தில் இந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் பரிசீலனை செய்யப்படும்.

கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த ஜனாதிபதி இனப்பிரச்னைக்கு இந்த நிலையில் ராணுவத் தீர்வு காண்பது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யவில்லையென்று குறிப்பிட்டார். சி-வி-ரி, இ

மேற்குலக
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்டார்.

அங்கு திரு. பாலசிங்கம் மேலும் கூறுகையில். முழுமையான யுத்த நிறுத்தத்தை நோக்காகக் கொண்டே இந்த மோதல் தவிர்ப்பு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது, போர் நிறுத்தம் நிலையானதாக. நிரந்தரமானதாக மாற்றம் கொள்வதற்கும் இந்த வெளிநாட்டு பிரதிநிதிகளின் பங்களிப்பு வழிசெய்யும்.

முன்னையகாலப் போர் நிறுத்தங்கள் எல்லாம் ஸ்ரீலங்கா இராணுவம் மீறியதால் தான் பேச்சுவார்த்தைகள் குழம்பின. திம்புப் பேச்சின்போது வவுனியாவில் இராணுவம் 200 பொதுமக்களை கொலை செய்ததை அடுத்து திம்புப் பேச்சுக்கள் குழம்பின.

பிரேமதாசா காலத்தில் பேச்சுக்களின் போதும் இராணுவத்தின் யுத்த நிறுத்த அத்துமீறல்கள் தான் மோதல்களை உருவாக்கி மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்திப் பேச்சுவார்த்தைகளை முறிக்கக் காரணமாயிருந்தன ஏனெனில் அந்தக் காலத்தில் நாங்கள் மேற்கொண்ட யுத்த நிறுத்தங்கள் எதுவும் எந்த விதமான வெளிநாட்டுக் குழுக்களாலும் கண்காணிப்புச் செய்யப்படவில்லை. இம்முறைதான் முதல் தடவையாக வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் கண்காணிப்புடன் இந்த யுத்த நிறுத்தம் கண்காணிக்கப்படுகிறது.

இந்த யுதத நிறுத்தம் வெற்றி பெறுவதோ அல்லது தோல்வியுறுவதோ என்பது சிறிலங்கா ஆயுதப்படைகளில் தான் தங்கியுள்ளது, எம்மைப் பொறுத்தளயில் நாங்கள் உறுதியான முறையில் நேர்மையான முறையில் இந்த போர்நிறுத்தத்தை கடைப்பிடிப்போம் என்ருர். வி-இ-சி-ரி

## இந்திய அரசுக்கு தெரிவிக்கப்படும்

(கொழும்பு)

''அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள சமாதான முயற்சிகள் பற்றி இந்தியாவுக்கும், மற்றைய எமது நேசநாடுகளுக்கும் அறிவிக்கவுள்ளோம்,'' என்று ஜனாதிபதி திருமதி சந்திரிகா நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை இந்தியாவுக்கு அனுப்பும்படி இந்தியா கோரினுல் என்ன செய்வீர்கள்? என்று கேட்கப்பட்டபோது: ''தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்கு அனுப்பும்படி இந்தியா ஒரு போதும் கேட்டதில்லை'' என்று வெளிவிவகார அமைச்சர் திரு. லஷ்மன் கதிர்காமர் பதிலளித்தார். -வி-ரி

மோதல்
[1 பக்கத் தொடர்ச்சி)

இன்று நள்ளிரவு மோதல் தவிர்ப்பு உடன்பாடு அமுலுக்கு வருவதை தொடர்ந்து அதனை பூரணமாக கடைப்பிப்பாளர்கள் என திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். சி-ரி

கண்காணிப்பு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்களும் உண்டு. இப்பிரதேசங்களில் உள்ள விடுதலைப்புலிகளின் பகுதிப் பொறுப்பாளருக்கும் இராணுவத்தின் பகுதிப் பொறுப்பாளருக்குமிடையில் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்படும் பட்சத்தில் மேற்படி இருவரும் கதைப்பார்கள். இதேவேளை அசம்பாவிதம் பற்றி ஏதாவ ஒருதரப்பு குழுவிடம் முறைப்பாடு செய்தால் கண்காணிப்புகுழு அங்கு சென்று அதுபற்றி விசாரிக்கும். அல்லது மேற்படி இரு தரப்பும் (புலிகள்-படையினர்) கதைத்து தீர்ப்பார்கள். வி-இ-சி-ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-